# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.1201/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜேஸ்வரி | க-பெ | அய்யாதுரை |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2026

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஐ தெரியும். வழக்கின் எதிரியை தெரியும். அ.சா.1 வீட்டிற்கு அருகில் நாங்கள் வாடகைக்கு குடியிருந்தோம். 21.12.2019 அன்று காலை 10.30 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன். அப்போது சரவணன் என்பவர் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்தார். சொத்து பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு அ.சா.1 ஐ பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டினார். அருகில் கிடைந்த கம்பியை கொண்டு ராதா அக்காவின் வலது கை மற்றும் இடது கால் ஆகிய பகுதிகளில் தாக்கினார். அதனை பார்த்த நான் பிரதீப், கண்ணையன் ஆகியோர் விலக்கி வைத்து ஆட்டோவை வரவழைத்து காயம்பட்ட ராதாவை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள். அவர்களிம் மேற்படி விவரங்களை சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

21.12.2019 காலை 10.00 மணிக்கு நான் எனது வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். சரவணன் என்பவர் ராதாவை கம்பியால் அடிக்கும் போது நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனது வீடும் ராதாவின் வீடும் பக்கத்து பக்கத்து வீடா என்றால் ஆமாம். நான் எனது வீட்டில் இருந்தேன், சம்பவத்தை எதுவும் பார்க்கவில்லை, நான் அ.சா.1 ன் வீட்டில் வாடகைக்கு இருந்து வருவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.15 11:30:28 +05'30'

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.